6. அறிவிப்புகள்

அவையுரிமைக் குழுவின் தலைவர் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் தன் அலுவல் காரணமாக சட்டப் பேரவையின் 183 (1) விதியின்கீழ் அவையுரிமைக் குழுவின் உறுப்பினராகிறார். அக் குழுவின் தலைமைப் பதவி வெற்றிடமாக உள்ளதால், பேரவையின் 183 (4) விதிக்கிணங்க பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ அவர்களை அக் குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

7. 1969-70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம். பேரவைமுன் வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1969-70 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் 1969-70-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப் பேரவையின்கண் வைக்க நான் முன் வந்துள்ளேன். இத்துடன் 1968-69-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும்*, 1967-68-ம் ஆண்டிற்கான கணக்குகளும் ® மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன.

2. கடந்த இரண்டு ஆண்டுகளைப் போல் வரவு-செலவுத் திட்டத்தை இவ்வாண்டும் இப் பேரவை முன் வைக்க, அரசியல் வாழ்வில் எனது அரிய வழிகாட்டியாக விளங்கிய அறிவுச் செம்மல் அண்ணா அவர்கள் ஊன் உடலோடு இல்லையே என்பதை எண்ணும்போது என் உள்ளம் தாங்கொணாத் தனித்துயரில் ஆழ்ந்து வருந்துகிறது. அவர் நல்லுடலோடு நிதி பொறுப்பினைத் திறம்படத் தாங்கிய காலையிலேயே, இவ் வரவு செலவுத் திட்டத்தின் சிறப்பான பகுதிகளுக்கு நல்லுருவம் ஒன்றை நல்கி, யிருந்தார். நிதி நிலை அறிக்கை போன்ற கவர்ச்சி அற்ற ஓர் ஆவணமும் அவர் கைவண்ணத்தால் எழில் வண்ணம் பெற்றது. நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு, ஆர்வமும் ஆக்க உணர்வும் இழைந்தோடும் ஊக்கத்தோடு குடிமக்கள் பேராதரவு நல்கும் வண்ணம் அவருடைய வரவு-செலவுத் திட்ட அறிக்கை வன்மையும் கூர்மையும் வாய்ந்ததாய் வீறு கொண்டு விளங்கியது. இம்மாநிலத்தின் நிதிப் பொறுப்பினை அவர் ஏற்ற காலையில், கடந்த காலம் காணா வகையில் நாட்டின பொருளாதார நிலை, இடர்ப்பாடுகளினால் சூழப்பட்டு இருள் மண்டிக் கிடந்தது. இந்தியக் கூட்டாட்சியின் அமைப்பு முறை, அவருடைய செயல்களுக்கு ஒரு வரம்பு கட்டும் வகையிலே நிலவி நின்ற போதிலும் அவ்வரையறையின் விளிம்பிற்குட்பட்டு இம் மாமன்றத்தின் முன்பு வைக்கப்பட்ட அவரது இரு வரவு-செலவுத் திட்டங்களும், நமது பொருளாதாரக் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் புதியதோர் வடிவத்தையும் புதுத் திருப்பத்தையும் கொடுத்தது. கடுமை நிறைந்த அவ்விரு ஆண்டுகளில் அவர் சாதித்த பணிகளை எண்ணிப் பார்க்கும்போது, சூழ்நிலைகள் மேலும் ஆதரவாக இருந்து, தண்டமிழ் நாட்டுப் பெருமக்களுக்கு அவர் சிறிது காலம் தொடர்ந்து தொண்டாற்றுவதற்குரிய ஒரு வாய்ப்பும் அளிக்கப்பட்டிருந்தால், இம் மாநிலம் எத்தனை பெருஞ்சாதனைகளைக் கண்டிருக்கும் என்பதற்கு அவை விடிவெள்ளியாய் மிளிர்கின்றன. அவருடைய மறைவிற்குப் பிறகு எங்களிடம் உள்ள வளம்-வலிமை-ஆற்றல் அனைத்தையும் ஒருங்கு திரட்டி அம் மாவீரனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவரால் சாற்றப்பட்ட கொள்கைகளை இயன்ற அளவு நிறைவேற்ற முயல்வோம் என்பதை இம் மன்றத்தினருக்கும் அதன் வாயிலாகத் தமிழக வரைப்பின் கண் வாழும் பெருமக்களுக்கும் உறுதியளிக்கின்றேன்.

---

* 58-82-ம் பக்கங்களில் இணைப்புகள் அச்சிடப்பட்டுள்ளன.

® 83-134-ம் பக்கங்களில் நிதியமைச்சருடைய உரையின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைப்புகளும் அச்சிடப்பட்டுள்ளன.